M

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 3.00 மணி | பதிவு எண் : | மதிப்பெண்கள்: 200

பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 40 x 1 = 40

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல?
   a) தனிநபர் உரிமை b) தனி மனித கட்டுப்பாடு
   c) எல்லா இலாபமும் வணிகருக்கே d) நெகிழச்சித் தன்மையற்றது
2. பாதுகாப்பு தொழிற்சாலைக்கு ஏற்ற உகந்த தொழில் முறை அமைப்பு
   a) அரசு நிறுமம் b) பொதுக்கூட்டுரு c) துறை முறை அமைப்பு d) வாரிய அமைப்பு
3. தனியாள் வணிகம் துவங்க
   a) குறைந்தது இரு நபர்கள் தேவை b) குறைந்தது ஏழு நபர்கள் தேவை c) ஒரு நபர் மட்டும் தேவை
4. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள்
   a) பேரளவு வியாபாரம் b) நடுத்தர வியாபாரம் c) சிற்றளவு வியாபாரம்
5. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்
   a) 1949 சட்டம் b) 1956 சட்டம் c) 1932 சட்டம்
6. "மனிதர்கள் குழுக்களாக இணைந்து முதல் அல்லது பணியினை இட்டு ஏதேனும் தொழில் மேற்கொண்டால் அது கூட்டாண்மை நிறுவனம் எனப்படும்" - இவ்வரைவிலக்கணத்தைக் கூறியவர்
   a) பேராசிரியர் எல்.எச்.ஹானி b) முனைவர் வில்லியம்ஸ் ஸ்பிரிகெல் c) கிம்பால் மற்றும் கிம்பால்
7. கூட்டாண்மை தோன்றும் உறவு முறை
   a) முதல்வர் மற்றும் முகவர் b) உரிமையாளர் மற்றும் வேலையாளர் c) எஜமானர் மற்றும் பணியாளர்
8. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார், அதன்
   a) கடனாளர்கள் b) உறுப்பினர்கள் c) கடன் வாடிக்கையர் d) நிறுமத்தில் கடன்
9. ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை கீழ்க்கண்ட ஆவணங்களுள் எது உணர்த்துகிறது?
   a) நிறுமத்தின் அமைப்பு முறையேடு b) நிறுமச் செயல்முறை விதிகள்
   c) தகவலறிக்கை d) சட்ட முறை உறுதி விளம்பல்
10. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பை கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.
    a) 90 நாட்கள் b) 100 நாட்கள் c) 130 நாட்கள் d) 60 நாட்கள்
11. கீழ்க்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்?
    a) சட்ட முறை நிறுமங்கள் b) தனி வரையறை நிறுமங்கள்
    c) பொது வரையறை நிறுமங்கள் d) பட்டய அல்லது சாசன நிறுமங்கள்
12. நிறுமச் செயலர் ஒருவர் _______ ஆல் நியமிக்கப்படுகின்றார்.
    a) அரசால் b) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்
    c) இயக்குநர் அவையால் d) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால்
13. _______ எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.
    a) 10 b) 15 c) 20 d) வரம்பில்லை
14. இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும்.
    a) முதன்மைச் சந்தை b) இரண்டாம் நிலைச் சந்தை
    c) பொருட்கள் சந்தை d) ஒழுங்குமுறை விற்பனைச் சந்தை
15. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது.
    a) சரக்கு b) நிதிப்பத்திரங்கள் c) சேவை d) நாட்டின் பணம்
16. சபைத் தலைவருடன் சேர்த்து செபியில் இவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்.
    a) 5 b) 7 c) 6 d) 8
17. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது _______.
    a) கிராமங்களில் b) மாவட்டத் தலைநகரங்களில்
    c) மாநிலத் தலைநகரங்களில் d) நகர்ப்புறங்களில்
18. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்
    a) மாற்ற முடியும் b) திருப்பிச் செலுத்தக்கூடியது
    c) திருப்பிச் செலுத்தக்கூடியதல்ல d) இவற்றில் ஏதும் இல்லை
19. பொதுக் கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது.
    a) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் b) செயல்பாட்டுச் சுதந்திரமின்மை
    c) கட்டுப்பாடுடன் கூடிய சுதந்திரம் d) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்
20. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது
    a) தனி வணிகர் b) துறைவாரி அமைப்பு c) அரசு நிறுமம் d) பொதுக்கழகம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

21. அரசாங்கத்தின் கொள்கை _______ சாதகமாக உள்ளது.
22. நுகர்வோர்கள் _______ மதிக்கப்படுகின்றனர். இவர்கள் வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள்.

23. வங்கித் தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை _______.
24. _______ என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.
25. அவசர காலங்களில் நிறுவனத்தின் நன்மைக்காக பயன்படுத்தும் உரிமைகளுக்கு _______ என்று பெயர்.
26. வரையறுத்த கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு கண்டிப்பாக _______ பொறுப்பாக இருக்க வேண்டும்.
27. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு _______.
28. சட்ட முறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு _______ நாட்களுக்கு முன்னராவது அனுப்பி வைக்க வேண்டும்.
29. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் _______ என அழைக்கப்படுகின்றன.
30. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்கு பெயர் _______.
31. பங்குநர் ஒருவருக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் _______ என அழைக்கப் பெறுகிறார்.
32. இயக்குநர் நிறுமத்தின் _______ பொறுப்புறுதியாண்மையராகவும், அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.
33. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது _______ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
34. பேரளவு நிறுவனங்கள் _______ அமைப்பில் நிறுவப்படுகின்றன.
35. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் _______ எனவும் அழைக்கப்படும்.
36. முதன்மை சந்தையில் _______ பங்குகளின் வணிகம் நடைபெறுகிறது.
37. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை _______.
38. சிறப்பங்காடிகள் எனப்படுவது பேரளவில் செயல்படும் _______ அமைப்பு.
39. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் _______.
40. இந்திய ரிசர்வ் வங்கி _______ க்கு எடுத்துக்காட்டாகும்.

பகுதி - ஆ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 4 = 40

41. அமைப்பை வரையறு.
42. ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன?
43. வரையறா பொறுப்பு என்றால் என்ன?
44. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?
45. கூட்டாண்மை கலைப்பிற்கும், கூட்டாண்மை நிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் இரண்டு)
46. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?
47. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?
48. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?
49. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
50. போல்ட் என்பது யாது?
51. பட்டியலிடுதல் என்றால் என்ன?
52. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளின் எடுத்துக்காட்டு நான்கினைக் கூறுக.
53. ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது?
54. அரசு நிறுமம் என்றால் என்ன?
55. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?

பகுதி - இ

**IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி:** 5 x 8 = 40

56. ஏதேனும் இரண்டு தனி நபர் வியாபார அமைப்பைப் பற்றி எழுதுக.
57. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கங்கள் யாவை?
58. அமைப்பு முறை ஏடு பொருளடக்கங்கள் ஏதேனும் நான்கிற்கு விளக்கம் தருக.
59. முறைகேடான ஒதுக்கீடு குறித்து குறிப்பு வரைக.
60. சட்டமுறை அறிக்கையில் காணப் பெற வேண்டியவை யாவை?
61. முதலீட்டாளர்கள், ஊக வணிகர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
62. கூட்டுறவுச் சங்கத்தின் ஏதேனும் எட்டு குறைபாடுகளை விவரிக்க.
63. பொதுக் கழகத்தின் இயல்புகள் யாவை?

பகுதி - ஈ

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 4 x 20 = 80

64. a) பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைக் கூறுக. மற்றும் அவற்றில் ஏதேனும் ஐந்து அமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக. *(அல்லது)*
    b) அரசுத் தொழிலகளின் நோக்கங்களை விவரி.
65. a) தனி நபர் வணிகத்தின் ஏதேனும் பத்து குணாதிசயங்களை விளக்குக. *(அல்லது)*
    b) பங்கு மாற்றகம் - வரைவிலக்கணம் தருக. பங்கு மாற்றகத்தின் இயல்புகளை விளக்குக.
66. a) கூட்டாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி கூறுக. *(அல்லது)*
    b) கூட்டுறவு அமைப்பின் சிறப்பியல்புகளில் ஏதேனும் பத்து பற்றி விவரித்து எழுதுக.
67. a) ஒரு நிறுமத்திற்கும், ஒரு கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் பத்து) *(அல்லது)*
    b) இயக்குநருக்குரிய அதிகாரங்கள் யாவை? அவற்றின் மீது என்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

******